# தகவல் பாலம்

## தூய ஆரோக்கிய அன்னைப் பங்கு

## OUR LADY OF GOOD HEALTH PARISH

Volume 1, Issue 19 January 2024

***PASTORAL STAFF:***

**Fr. Charles W. Collins**
*Pastor*

**Maureen Rajadurai**
*Parish Secretary*

***MASS SCHEDULE:***

| | |
|---|---|
| **Sundays:** | **12:30 pm & 4:30 pm** |
| **Tuesdays:** | **7:00 pm** |
| **First Fridays:** | **7:00 pm** |

***ONLINE STREAMING SITES:***

**https://www.olghtamilparish.com/**
**https://www.facebook.com/OLGHTamilParish**
**https://www.youtube.com/olghtamilparish**
**OLGH TV (Eagle TV - 977 & Star TV 1450)**

***OUR LADY OF GOOD HEALTH PARISH***

**131 Birchmount Road,**
**Scarborough, ON M1N 3J7**
***(Birchmount & Danforth Ave.)***

| | |
|---|---|
| **Phone:** | **416-264-OLGH (6544)** |
| **Fax:** | **416-264-6545** |
| **Email:** | **office@olghtamilparish.com** |
| **Website:** | **www.olghtamilparish.com** |





### தை மாத விசேட திருப்பலிகள்

**JAN 1** — அன்னை மரியாள் இறைவனின் தாய் பெருவிழா
திங்கட்கிழமை மதியம் 12:30

**JAN 7** — ஆண்டவரின் திருக்காட்சிப் பெருவிழா
ஞாயிற்றுகிழமை மதியம் 12:30, மாலை 4:30

**JAN 14** — பொங்கல் திருவிழா
ஞாயிற்றுகிழமை மாலை 4:30

**JAN 21** — புனித செபஸ்தியார் ஆலயப் பெருவிழாவும் இளையோர் தமிழ் மரபுத்திங்கள் நிகழ்வும்
ஞாயிற்றுகிழமை மாலை 4:30

### மேய்ப்புப்பணி திட்டமிடல் (Pastoral Plan)



ரொறன்ரோ அதியுயர் மறைமாவட்டத்தின் மேய்ப்புப்பணி திட்டமிடலுக்கு இறைமக்களின் பங்களிப்பையும் ஆலோசனைகளையும் பெறுவதற்காக அதிவணக்கத்திகுரிய பேராயர் பிரான்சிஸ் லீயோ அவர்கள் அழைப்புவிடுத்துள்ளார் உங்களின் பங்களிப்பை வழங்க கீழ்காணும் இணைப்பைப் பயன்படுத்தவும்.

**https://www.archtoronto.org/en/offices-and-ministries/sub-sites/consultation/home/**



## தூய அந்தோனியார் நவநாள்

ஒவ்வொரு செவ்வாய்கிழமையும் இரவு 7:00 மணிக்கு நவநாள் வழிபாடும் திருப்பலியும் நடைபெறும்

## முதல் வெள்ளி - நற்கருணை வழிபாடு

இரவு 7:00 மணிக்கு நற்கருணை வழிபாடும் தொடர்ந்து திருப்பலியும் நடைபெறும்

## திருமுழுக்கு அருட்சாதனம்

தமது பிள்ளைகளுக்கு திருமுழுக்கு அருட்சாதனத்தை பெற்றுக்கொள்ள விரும்புகிறவர்கள் மூன்று மாதங்களுக்கு முன்னதாக எமது பங்கு அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்.

## ஒப்புரவு அருட்சாதனம்

அனைத்து திருப்பலிகளின் முன்பும் பின்பும் அல்லது முன்னேற்பாட்டுடன் ஒப்புரவு அருட்சாதனத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

## திருமண அருட்சாதனம்

தயவுசெய்து காலம் தாமதிக்காமல் பங்குத்தந்தையை தொடர்பு கொள்ளவும். ஒரு வருடத்திற்கு முன்னர் அறிவிப்பது முக்கியமானது. ரொறன்ரோ மறைமாவட்டத்தினால் ஒழுங்குசெய்யப்படுகின்ற திருமண ஆயத்த வகுப்புகளில் பங்குபற்றி சான்றிதழைப் பெற்றுக்கொள்வதும் அவசியமானது.




## குடும்பங்களைப் பதிவுசெய்தல்

ரொறன்ரோ அதியுயர்மறைமாவட்ட வழக்கப்படி திருமுழுக்கு, திருமணம் போன்ற திருவருட்சாதனங்களைப் பெற்றுக்கொள்ள கத்தோலிக்க பங்கு ஒன்றில் பதிவு செய்திருப்பது அவசியமானது. எமது தமிழ் கத்தோலிக்க பங்கில் உங்களது குடும்பங்களையும் பதிவு செய்துகொள்ளுவோம்..

## YOUTH/CHILDREN UPCOMING PROGRAMS

**- Every 3rd Sunday of each month will be Youth Mass during the 12:30pm mass.**

**- Children's Liturgy sessions will resume on January 7th during 12:30 and 4:30pm masses.**

**- January 21st is the Tamil Heritage Month celebration hosted by our Parish Youths and Children after the 4:30pm mass. Practice sessions to be conducted at 2pm on Jan. 7, and 14**.

Thank you to all our OLGH Youths who participated in this year's Christmas Oli Vizha. We would also like to thank all volunteers and parents who supported and walked with us in our journey of faith throughout the year of 2023.

## 2024 அன்பளிப்பு கடித உறைகள்

2024 ஆண்டிற்கான உங்களது அன்பளிப்புக் கடித உறைகளை மறக்காமல் பெற்றுக்கொள்ளுங்கள் உங்களது தாராளமான உதவியில் தான் எமது பங்கு வளர்ச்சிபெற்று வருகிறது. **"சிறு துளி பெரு வெள்ளம் - எமது ஆலயமே எமது குடும்பம்"**

## 2024 திருவழிபாட்டு நாட்காட்டி

எமது பங்கின் 2024 வருடத்திற்கான திருவழிபாட்டு நாட்காட்டி நாளாந்த வாசகங்கள், பெருவிழா திருப்பலிகள், தாயகத்திலுள்ள ஆலய திருவிழாக்கள், மற்றும் எமது பங்கு சார்ந்த அனைத்து விடயங்களையும் உள்ளடக்கி வெளியிடப்பட்டுள்ளது. ஒரு சிறிய அன்பளிப்பைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்

## 2024 இறை வேண்டுதல் ஆண்டு

**நம்பிக்கையின் திருப்பயணிகள்** என்ற தலைப்பில் வருகின்ற 2025 ஆம் ஆண்டு கத்தோலிக்க திருஅவை ஜூபிலி ஆண்டை கொண்டாட இருக்கிறது. இதற்கு ஆயத்தமாக 2024ஆம் ஆண்டை இறை வேண்டுதல் ஆண்டாக திருத்தந்தை பிரானசிஸ் அவர்கள் பிரகடனப்படுத்தியுள்ள நிலையில் திருஅவையின் வளர்ச்சிக்கு இறை வேண்டுதலின் முக்கியத்துவத்தை அனைவரும் உணர்ந்து கொள்ளுமுகமாக பல செயல்பாடுகள் முன்னெடுக்கபடவுள்ளன.

## எமது பங்குத்தந்தையின் உள்ளத்திலிருந்து



தூய ஆரோக்கிய அன்னை கத்தோலிக்க பங்கை நேசிக்கும் என் அன்பான பங்கு மக்களே, இளையோரே சிறுவர்களே,

2023ம் ஆண்டிற்கான கிறிஸ்து பிறப்பையும், 2024ம் ஆண்டின் வருகையைக் கொண்டாடுகின்ற புத்தாண்டு தினத்தையும், எமது ஆலயத்திலும் உங்கள் இல்லங்களிலும் உங்களோடு இணைந்து வரவேற்பதில் நான் மனமகிழ்வும் உளநிறைவும் அடைகின்றேன்.

நான் ஆண்டவரின் அடிமை உமது சொற்படியே எனக்கு நிகழட்டும்” என்று தன்னையே இறைவாழ்விற்கு அர்ப்பணித்த அன்னை மரியாவின் அர்ப்பணிப்பை லூக்காஸ் முதல் அதிகாரத்தில் நாங்கள் வாசிக்கின்றோம். தனக்கு வர இருந்த துன்பத்தைப் பற்றி அன்னை மரியாள் அஞ்சவில்லை. இறைவனின் சித்தம் எதுவோ அதுவே தனது விருப்பமும் என்று, இறைவனுக்கு மட்டுமே அஞ்சி தன்னை முழுமையாக இறைவனுக்கு அடிமை என்று அர்ப்பணித்தார். தாயாரின் தாழ்மைக்குப் பரிசாக, இறைவனின் தாயாக உயர்த்தப்பட்டார்.

இயேசு பிறந்த விழாவை உலகெங்கும் கொண்டாடும் இவ்வேளையில், பிறக்கும் பாலக இயேசுவுக்கும், அவரது பெற்றோரான தூய சூசை மற்றும் தேவதாயாருக்கும் நாம் என்ன பரிசு கொடுக்கப் போகிறோம். குறிப்பாக, அவர்கள் மூவரும் எதிர்பார்க்கும் பரிசு எதுவாக இருக்குமோ, அதைக் கொடுப்பதே உகந்ததாக இருக்கும். அவர்கள் எம்மிடமிருந்து பெறவிரும்பும் பரிசு பொன்னோ பொருளோ அல்ல. காணியோ பூமியோ, வீடோ சொத்தோ அல்ல. தேவதாயாரும் தூய சூசையப்பரும் தங்களது திருக்குடும்பத்தில் பிறந்திருக்கும் பாலக இயேசுவின் மகிழ்வில், அன்பையும், பண்பையும், பணிவையும், பகிர்ந்து உதவுவதையுமே எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள். பொருண்மிய சிரமங்களில் சிக்குண்டு அவதிப்படும் ஏழைகளுக்கும், பல்வேறு குடும்ப சுமைகளைச் சமாளிக்க முடியாமல் திண்டாடும் குடும்பங்களுக்கும், தாயகத்தில் வறுமையில் வாடும் எம் உடன்பிறவா உறவுகளுக்கும், நாம் உதவும்போது, நீ எனக்கே செய்தாய் என்று, குழந்தை இயேசு குதூகலமடைகிறார்.

தேவதாயாரைப் போன்று, தியாகமும் விட்டுக்கொடுப்பும் நிறைந்த வாழ்வின் அவசியத்தை, வத்திக்கானில் நடந்த நிகழ்வொன்றில் பாப்பரசர் பிரான்சிஸ் அவர்களும் விதந்துரைத்துள்ளார். கடுமையான சித்தாந்த நிலைப்பாடுகளைக் கைவிடவேண்டுமென்றும், இன்றைய யதார்த்தங்களைப் புரிந்துகொள்ளும் வாய்ப்புக்களை இத்தகைய கடும் நிலைப்பாடுகள் தடுத்து விடுமென்றும் எச்சரிக்கிறார். நல்ல நோக்கங்கள் என்ற போர்வையில், நம்மை யதார்த்தத்தில் இருந்து பிரித்து முன்னேற விடாமல் தடுக்கும் கடுமையான சித்தாந்த நிலைப்பாடுகளுக்கு எதிராக நாம் விழிப்புடன் இருக்கவேண்டுமென அறைகூவல் விடுக்கிறார்.

ரோம் நகரையும் வத்திக்கானை மையமாகக் கொண்டு செயற்படும் கருதினால்கள் மற்றும் பிரதான நிர்வாகிகள் கலந்து கொண்ட இந்நிகழ்வில், இன்றைய காலகட்டத்தின் யதார்த்தத்தைப் புரிந்து, அதன்படி செயற்படுமாறு அழைப்பு விடுத்திருப்பது அனைவருக்கும் முக்கியமான செய்தியாக அமைகிறது.

தேவதாயாரைப் போன்று, அஞ்சாமல் இருக்க துணிவு வேண்டும், துணிவைப் பெற நம்பிக்கை வேண்டும். நம்பிக்கையுடன், காலத்தின் தேவைக்கேற்ப, யதார்த்த சூழ்நிலையைப் புரிந்துகொண்டு, புதியவர்களுக்கும், இளையவர்களுக்கும், வாய்ப்பு மறுக்கப்படுவோருக்கும், புதிய கருத்தியலுடன் இணங்கிப் போவோருக்கும், நாம் அஞ்சாமல், புறமுதுகு காட்டாமல், எமது மனதையும் செவியையும் திறந்துவைத்து, அவர்களது கருத்துக்களிலுள்ள நியாயங்களைப் புரிந்துகொள்ள முயற்சிப்பது அவசியமானது.

றொறன்ரோ அதியுயர் மறைமாவட்டத்தின் புதிய பேராயர் அதிவணக்கத்திற்குரிய பிரான்சிஸ் லியோ அவர்கள் வழங்கியிருக்கும் 2023ம் ஆண்டுக்கான நத்தார் செய்தியில், இரண்டு விடயங்களை ஞாபகப்படுத்துகிறார்.

முதலாவதாக, கடவுள் தமது ஒரே மகனை இந்த உலகிற்கு ஒளியாக அனுப்பினார். கிறீஸ்தவர்களாக, நாமும் இயேசுவின் ஒளியை எமது இதயத்தில் ஏற்ற வேண்டும். நிரந்தரமாக எரியும் இந்த ஒளி, நாம் எந்த சவாலையும் எதிர்கொள்ளும்போது, இன்னும் அதிகமாக பிரகாசித்து, உலகின் தீமைகளிலும் இருளிலும் கரைந்துபோகாமல் எம்மைக் காப்பாற்ற வேண்டும். தேவதாயார் துணிவுடன் ஆம் என்று இணங்கியதுபோன்று, நாமும் எம்மை முழுமனதுடன் இறைவனின் சித்தத்திற்கு எம்மை அர்ப்பணிக்க வேண்டும். அப்படி எம்மை முழுமையாக அர்ப்பணிக்கும்போது, இறைவன் எமது வாழ்வில் ஒளியேற்றி எம் வாழ்வை மாற்றுவார்.

இரண்டாவதாக, இப்படி எமது உள்ளத்தில் இருக்கும் இறை ஒளியை, மற்றவர்களிலும் ஒளிர்வதற்கு, நாம் சில தானதர்மங்களைச் செய்ய முன்வரவேண்டும். இருளும் சவால்களும் தொடர்ந்து எம்மைச் சோதிக்கும்போதும், எமக்குள் இருக்கும் இறை ஒளியை நாம் மற்றவருடன் பகிர்வது அவசியம். இப்படி மற்றவர்களையும்

எம்முடன் இணைந்து ஒளிரப்பண்ணுவதன் ஊடாக, அன்பு, நம்பிக்கை, கரிசனை, மன்னிப்பு மற்றும் விசுவாசம் போன்ற இறைபண்புகளை வளர்ப்பதன் மூலம், பலமடங்கு நன்மைகளை நாம் மீளப் பெறுவோம் என்பதை மறக்க வேண்டாம். நோய்வாய்ப்பட்டோர், கைவிடப்பட்டோர் மற்றும் பாதிக்கப்பட்டோருக்கு நாம் உதவுவது, எமது இதயத்தில் பிறந்திருக்கும் கிறீஸ்து இயேசுவின் ஒளியை மற்றவரோடு பகிர்ந்து கொள்வதால் வருகின்ற நன்மைகளுக்கான தூய பாதையாக அமையும்.

எனவே, தூய சூசையப்பரும் தேவதாயாரும் செய்ததைப்போன்று, பெத்லகேம் நகருக்கான தூய பயணத்தில் நாமும் மனதால் இணைந்து கொள்வோம். பாலக இயேசுவின் இறைஒளி, உங்கள் உள்ளங்களிலும் இல்லங்களிலும் உங்களைச் சுற்றியுள்ள அனைவரிலும் நிறைவாக ஒளிர வேண்டுமென வாழ்த்தியுள்ளார் ரொறன்ரோ ஆயர் அதிவண பிரான்சிஸ் லியோ.


எனவே, அன்பான தூய ஆரோக்கிய அன்னை பங்கு மக்களே, இறைவன் எமக்குத் தந்த அருள்வளங்களுக்காக நன்றி கூறும் அதேவேளை, இயன்றளவு மற்றவர்களுடனும் அதைப் பகிர்ந்து, தாழ்ச்சியிலும் இறை அன்பிலும் பிறந்திருக்கும் பாலக இயேசுவை மகிழ்விப்போம். பிறக்கும் புதிய வருடம், உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினர் உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும், அனைத்து நலன்களையும் வளங்களையும் வழங்க இறை ஆசீர் வேண்டி வாழ்த்துகிறேன்.

பிறந்திருக்கின்ற பாலக இயேசுவின் அனைத்து ஆசிகளும் உங்களுக்கும் உங்கள் குடும்பத்திற்கும் எங்கள் பங்கிற்கும் நிறைவாகக் கிடைக்க வேண்டுமென்று ஆசித்து வாழ்த்துகிறேன்.

***WISH YOU A VERY HAPPY CHRISTMAS AND A BRIGHT NEW YEAR 2024***

**சாள்ஸ் கொலின்ஸ்**
*பங்குத்தந்தை*
*தூய ஆரோக்கிய அன்னைத் தமிழ்ப் பங்கு*

---



**SEASON'S GREETINGS**

***Wishing you all a blessed and Merry Christmas and a prosperous happy New Year!!!***

May God bless you and your loved ones with the peace and hope that comes through the birth of our Saviour, Jesus Christ.

***Fr. Peter Gitendran***
*Residence*

## நன்றியோடு நினைக்கின்றோம்

எமது பங்கின் வளர்ச்சிக்காக பல வழிகளில் உதவிய, தொடர்ந்தும் உழைத்துவருகின்ற பொதுநிலையினர், பீடப்பணியாளர்கள், சிறுவர் மறைக்கல்வி ஆசிரியர்கள், இளையோர் குழு, பாடகர் குழாம், வரவேற்பாளர்கள், வாசகர்கள், மரியாயின் சேனை, நற்கருணைப் பணியாளர்கள், பங்குச்சபை உறுப்பினர்கள் வாகனத் தரிப்பு ஒழுங்கு செய்பவர்கள், தன்னார்வத் தொண்டர்கள், இலைமறை காயாக அர்ப்பணிப்புடனும் நல்மனதுடனும் பணிகளை மேற்கொள்ளும் அனைத்து நல்லுள்ளங்களுக்கும் மகிழ்ச்சியுடன் கூடிய எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதுடன், மலர்கின்ற இவ்வாண்டிலும் உங்கள் ஒவ்வொருவரின் பூரண ஒத்துழைப்பை அன்போடு எதிர்பார்த்து நிற்கிறோம். உங்களையும் உங்கள் குடும்பத்தையும் தூய ஆரோக்கிய அன்னை ஆசீர்வதித்து வழிநடத்த தினமும் நாம் வேண்டுகின்றோம்.




**எமது பங்கிற்கு நன்கொடையளிக்க அல்லது நன்கொடைத் தொகையைக் அதிகரிக்க விரும்புகிறீர்களா?**

**பொதுவான முறை**
ஒரு வருடத்திற்கான அன்பளிப்பு கடித உறைகளை பெற்று ஒவ்வொரு கிழமையும் திருப்பலியின் போது செலுத்துதல்.

**முன் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவு முறை - சிறந்த முறை** ***
உங்கள் வங்கிக் கணக்கிலிருந்து மாதாந்தம் ஒரு குறிப்பிட்ட தொகையை நேரடியாகப் பெற்றுக்கொள்ளுதல்.

**நன்கொடைகள்**
நீங்கள் திருப்பலிக்கு வருகின்ற போது அல்லது எமது பங்கு அலுவலகத்திற்கு வருகின்ற போது உங்களுக்கு விரும்பிய தொகையை செலுத்துதல்.

**$50ம் அதற்கு மேற்பட்ட வருடாந்த அன்பளிப்புகளுக்கு வரி விலக்கிற்கான பற்றுச்சீட்டுகள் வழங்கப்படும்.**

**மேலதிக விபரங்களுக்கு எமது அலுவலகத்தை (416-264-6544) தொடர்பு கொள்ளவும்.**